**செய்தி வெளியீடு எண்:748** **நாள்: 05.11.2017**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 3.11.2017 அன்று நேரில் சென்று போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து, இன்று (5.11.2017), பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆர்.கே.நகர் பகுதியில் உள்ள கொடுங்கையூர் லிங்க் கால்வாயில், ஐரோப்பாவில் உள்ள லிச்சென்ஸ்டீன் நாட்டிலிருந்து வாங்கபட்ட ரொபாட்டிக் எக்ஸ்கவேட்டர் இயந்திரம் மூலம் அடைப்பு சீர்செய்யும் பணிகளை பார்வையிட்டு, பணிகளை விரைந்து செயல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். அப்போது தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் குறுக்கே உள்ள லிங்க் கால்வாய் பாலத்தின் கீழ் ஏற்பட்டு உள்ள அடைப்புகளை பார்வையிட்டு, அப்பாலத்தினை உயர்த்தி கட்டி, எதிர்வரும் காலங்களில் அடைப்பு இல்லாமல் எளிதாக நீர் செல்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டார்கள்.

சென்னை, இரட்டை ஏரி சந்திப்பு அருகில் வீனஸ் நகர் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை மோட்டார்கள் மூலம் அகற்றும் பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அடுத்த பருவமழைக்கு முன் இந்த பகுதியில் உள்ள நீர் 200 அடி சாலையை கடந்து செல்வதற்கு தேவையான வடிகால்வாய்களை உயர்த்தி கட்டுமாறு ஆணையிட்டார்கள். பின்பு மண்டலம்–6, வார்டு 65 பகுதியில் விவேகானந்தா பிரதான சாலை, திருமலை நகரில் நடைபெற்ற மருத்துவ முகாமை பார்வையிட்டு, முதியோர் மற்றும் குழந்தைகள் உட்பட சுமார் 200 பயனாளிகளுக்கு, ரொட்டி, பிஸ்கெட் மற்றும் பால் ஆகியவற்றை வழங்கினார்கள்.

தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பகுதியில் மழைநீரால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களை பார்வையிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். சிட்லப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட பாபு தெரு, ஜவஹர் தெரு, வைத்தியலிங்கம் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தேங்கி இருந்த தண்ணீரினை வெளியேற்றும் பணியினையும் பார்வையிட்டார்கள். சேலையூர் மற்றும் சிட்லப்பாக்கம் ஆகிய ஏரிகளின் உபநீர் கால்வாய்களின் மூலம் இப்பகுதிகளுக்குள் தண்ணீர் புகுவதை அறிந்து, அதற்குரிய நிரந்தர தீர்வாக, தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலையின் வழியாக ஒரு புதிய மழை நீர் வடிகால் அமைத்து, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட சுவாமிமலைப் பகுதிகளிலுள்ள தெருக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். ஏற்கனவே அப்பகுதிகளில் 3 அடிக்கு மேல் தேங்கியிருந்த தண்ணீர் வெளியேற்றப்பட்டு, தற்போது 1 அடிக்கும் குறைவாக குறைக்கப்பட்டிருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்கள். ஏற்கனவே உள்ள மழை நீர் வாய்காலை விரிவுபடுத்தி, அதனை அருகிலுள்ள – துரைப்பாக்கம் சாலையில் உள்ள மழைநீர் வாய்க்காலுடன் இணைத்து இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். பின்னர் மழை நீரால் பாதிக்கப்பட்ட தெருக்களிலுள்ள நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், கீழ்க்கட்டளையில், காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் நகராட்சி, அனகாபுத்தூர் கிராமத்தில் மின்னல் தாக்கி பலியான திரு.லோகேஷ் மற்றும் திரு.கிஷோர்குமார் ஆகியோரின் குடும்பத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, தலா ரூபாய் 4 இலட்சம் வீதம், ரூபாய் 8 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கி, ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசியதாவது:

‘‘ இந்த இரண்டு மாத பருவகாலங்களில் 79 செ.மீ. மழை பொழிந்திருக்க வேண்டும். ஆனால் கடந்த 5 நாட்களில், சென்னை மாநகர மற்றும் புறநகர் பகுதிகளில் 56.6 செ.மீ. மழை பொழிந்திருக்கின்றது. கிட்டத்தட்ட 72 சதவீத மழை இந்த 5 நாட்களில் பொழிந்திருக்கின்றது. அப்படி மழை பொழிந்திருந்தாலும், அரசு உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, தாழ்வான பகுதியில் தேங்கியுள்ள மழைநீர் அனைத்தும் வெளியேற்றப்பட்டிருக்கின்றது. 315 இடங்களில் மழை நீர் தேங்கியிருந்ததில், தற்பொழுது, 200 இடங்களில் தேங்கிய மழைநீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்டிருக்கின்றது, மீதமுள்ள 115 இடங்களில் மழைநீரை வெளியேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதோடு, அதிகளவில் மழைநீர் தேங்கிய பகுதிகளான, சாஸ்திரி நகர், ராஜாஜி நகர், பெரியார் நகர், வி.ஜி.பி.செல்வம் நகர், புவனேஸ்வரி நகர் போன்ற பகுதிகளில் 167 மோட்டார்கள் மூலமாக மழைநீர் வெளியேற்றும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும், 22 சுரங்கப்பாதைகளில் முழுவதுமாக மழைநீர் வெளியேற்றப்பட்டு வாகனங்கள் தடையில்லாமல் சென்று கொண்டிருக்கின்றன.

மழைநீரால் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைப்பதற்காக, 81 முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதில் 20 முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த முகாம்களில் 2161 பேர் தங்கியிருக்கின்றனர். அத்துடன் 1,81,625 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்று காலையில் மட்டும் 34,959 உணவுப் பொட்டலங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை, 512 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, 32,236 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதுமட்டுமல்லாமல், ஆங்காங்கே உடனுக்குடன் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், ஏற்கனவே 400 சிறப்பு நடமாடும் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, பொதுமக்களுக்கு விரைந்து மருத்துவ சேவை செய்யவேண்டுமென்பதற்காக, இன்றையதினம் 200 நடமாடும் மருத்துவ முகாம்கள் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 600 மருத்துவ முகாம்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில், மருத்துவர்கள், செவிலியர்கள், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய அலுவலர்கள் என சுமார் 3000 நபர்கள் இப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல், உடனுக்குடன் தகவல் பெறப்பட்டு, எங்கெல்லாம் மழைநீர் தேங்கியுள்ளதோ அதனை வெளியேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மக்களுக்குத் தேவையான வசதிகளை அரசு செய்து கொண்டிருக்கின்றது. பொதுமக்களுக்கு தேவையான உணவு, உடை மற்றும் மருத்துவ சேவைகளெல்லாம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 14,000 டன் சேறு அள்ளப்பட்டிருக்கின்றது. 1500 கிலோமீட்டர் தூரத்திற்கு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால், கனமழை பொழிந்தும்கூட, மழைநீர் விரைவாக வெளியேறியிருக்கின்றது.

கடந்த இரண்டு நாட்கள் மட்டுமல்லாமல், மழை வந்தவுடன் அதிகாரிகள் ஆங்காங்கே சென்று உடனுக்குடன் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றப்படுகின்றது. மழைநீரை வெளியேற்றும் பணி அரசினால் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றது. மழை வருமென்று எதிர்நோக்கி, முன்கூட்டியே, எனது தலைமையில் மூன்று முறை நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு மூத்த அமைச்சர் பெருமக்கள், அரசு அதிகாரிகளுடன் மழை பாதிப்பு ஏற்படாதவண்ணம் பணிகள் மேற்கொள்வது, மழைநீரை வெளியேற்றுவது மற்றும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல்

அரசு உரிய உதவிகளை எப்படி மேற்கொள்வது என்றெல்லாம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த அமைச்சர்கள், துறை அதிகாரிகளுடன் பலமுறை கலந்துபேசி, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இவ்வாலோசனைகளின்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பொதுமக்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது. கிட்டத்தட்ட 315 தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு, மீதமுள்ள 115 தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நீர்நிலைகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளைப் பொறுத்தவரை, ஏற்கனவே ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணைகளை மேற்கொண்டு, அம்மாவினுடைய அரசு ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டிருக்கின்றது. அத்துடன் அகற்றப்பட்ட இடங்களில் வசித்து வந்த பொதுமக்களுக்குத் தேவையான மாற்றிட வசதி செய்து கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பருவமழை காலங்கள் என்றில்லாமல், மற்ற நேரங்களிலும், ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மழைநீரை வெளியேற்றுவதற்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு வடிகால் வசதி செய்து கொடுப்பதற்காக திட்டம் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அப்பணிகளெல்லாம் நிறைவேற்றப்படும்பொழுது, மழைநீர் தேங்கும் நிலை முற்றிலும் அகற்றப்படும்.

கடலோர மாவட்டங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக பாதிக்கப்பட்ட நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுடன் சேர்ந்து நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

விவசாய நிலங்களில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றவும் அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் எந்தெந்த வழிகளில் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமோ, அத்தனை வழிகளிலும் நன்மை செய்து கொண்டிருக்கின்றது.''

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சி.விஜய பாஸ்கர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எம்.ஆர்.விஜயபாஸ்கர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு பா.பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் வெள்ளத் தடுப்பு பணிகளைப் பார்வையிட உடன் சென்றார்கள்.

* * * * *

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**